சமூகநல இலாகாவின் உதவித் திட்டத்திற்கு

# கூடுதலாக 500 மில்லியன் ரிங்கிட் நிதி ஒதுக்கீடு

## – சிவகுமார் கருத்து



கோலாலம்பூர், அக். 25-
2025 வரவு செலவுத் திட்டத்தில் சமூக நல இலாகாவின் ரொக்க உதவித் தொகைக்கு மொத்தமாக 2.9 பில்லியன் ரிங்கிட் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பது வரவேற்கத் தக்கது என்று முன்னாள் அமைச்சர் வ. சிவகுமார் கருத்துரைத்துள்ளார்.

சமூக நல இலாகா வாயிலாக விநியோகிக் கப்படும் நிதியுதவி யானது சிரமத்தில் உள்ளவர்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைப்பதற்கும் அவர்கள் அன்றாட வாழ்வாதாரத்தைக் கடத்துவதற்கும் அடிப்படை ஆதரவாக இருக்கின்றது. இந்த நிதியுதவி முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள், தனித்துவாழும் தாய்மார்கள், சிறுவர்கள், ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது.

எனவே மலேசியாவில் வறிய ஏழ்மை நிலையை முற்றிலும் துடைத்தொழிக்கும் முயற்சியில் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பிரதமரின் தைரியம் அளப்பரியது என்று பத்துகாஜா நாடாளுமன்ற உறுப்பினர் வ.சிவகுமார் பாராட்டிப் பேசியுள்ளார்.

இந்நிலையில் 2025 மடானி அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் கடந்த முறையைக் காட்டிலும் கூடுதலாக 500 மில்லியன் ரிங்கிட் நிதி வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே கடந்தமுறை 2.4 பில்லியன் ரிங்கிட் நிதி இந்த திட்டத்திற்கு ஒதுக்கிடப்பட்ட நிலையில் இம்முறை 2.9 பில்லியன் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இனம், மதம், அரசியல் உள்ளிட்ட அம்சங்கள் கணக்கில் எடுக்கப்படாமல் இந்த நிதியுதவி வழங்கப்படுகின்றது. இதன் மூலம் ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் மடானி அரசாங்கத்தின் பரிவின் வாயிலாக நன்மைகளைப் பெற முடியும். அது மட்டுமல்லாது அடிக்கடி நிதிப் பற்றாக்குறையை எதிர்நோக்கும் சமூக நல இலாகாவிற்கு கூடுதலாக 500 மில்லியன் ரிங்கிட நிதி வழங்கப்படுவது பெரும் ஆதரவாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

கிள்ளானில் மண் உள்வாங்கும்

# அபாயம் ஏதுமில்லை

## மக்களவையில் தகவல்



கோலாலம்பூர், அக். 25-
கிள்ளானில் சுண்ணாம்புக்கற்கள் காணப்படாத நிலையில் அங்கு மண் உள்வாங்கும் சம்பவங்கள் நிகழ்வதற்கான அபாயம் ஏதும் இல்லை என பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ அலெக்சாண்டர் நந்தா லிங்கி கூறினார்.

பூமிக்கு அடியில் உள்ள குழாய் நீர்க்கசிவு, கால்வாய், நிலத்தில் காணப்படும் நீர் அழுத்தம் காரணமாகவே கிள்ளானில் வழக்கமாக மண் உள்வாங்கும் சம்பவங்கள் ஏற்படுவதாக அவர் கூறினார்.

கிள்ளான் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள பகுதிகள் உட்பட நாடு முழுவதும் உள்ள கூட்டரசு சாலைகளைப் பராமரிக்கும் பொறுப்பைப் பொதுப்பணித்துறை அமைச்சு ஏற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பூமிக்கு அடியில் குழாய் நீர்க்கசிவு ஏற்படும் சம்பவங்களைத் தவிர்ப்பதற்கு கூட்டரசு சாலைகளில் இதுபோன்ற சம்பவங்கள் மேலும் நிகழாமல் இருப்பதைப் பொதுப்பணித்துறை அமைச்சு உறுதிப்படுத்தும் எனவும் அவர் தெரிவித்தார்.

ரிசர்வ் நிலங்களில் பூமிக்கு அடியில் குழாய் பொருத்தும் நடவடிக்கைகளில் நடப்பு விதிமுறைகளை அவசியம் பின்பற்ற வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

நேற்று மக்களவையில் கேள்வி - பதில் நேரத்தின்போது கிள்ளான் உறுப்பினர் வீ. கணபதிராவின் (பக்காத்தான் ஹராப்பான்) கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முதல்கட்டப் பரிசோதனை உட்பட திட்டமிடும் வகையில் மண் உள்வாங்கும் சம்பவங்களை நம்மால் தவிர்க்க முடியும் எனவும் அவர் கூறினார்.

# செந்தூலில் 32 அந்நிய நாட்டவர்கள் கைது

## குடிநுழைவுத்துறை நடவடிக்கை



கோலாலம்பூர், அக். 25-
செந்தூலில் இரண்டு கடைகளில் சோதனை நடத்திய குடிநுழைவுத்துறையினர் பெர்மிட் இன்றி நாட்டிற்குள் நுழைந்த 32 அந்நிய நாட்டவர்களைக் கைது செய்தனர்.

நேற்று முன்தினம் மாலை 4.30 மணி அளவில் மேற்கொள்ளப்பட்ட இச்சோதனை நடவடிக்கையில் எரிவாயு விற்பனை செய்யும் 24 வயதுடைய ஆடவர் கைது செய்யப்பட்டதாக குடிநுழைவுத்துறையின் கோலாலம்பூர் மாநில இயக்குநர் வான் முகமட் சாவ்பீ வான் யூசோப் கூறினார்.

உள்நாட்டு வாணிப, வாழ்க்கைச் செலவினத்துறை அமைச்சு, மலேசிய நிறுவன ஆணையத்துடன் இணைந்து இச்சோதனை மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

எரிவாயு விற்பனைக் கடை உட்பட வாகனப் பட்டறை, சாயம் பூசும் சேவை மையம் ஒன்றையும் குடிநுழைவுத்துறை கடந்த இரண்டு வாரங்களாக அணுக்கமாகக் கண்காணித்து வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட கடைகளில் அந்நிய நாட்டவர்கள் சட்டவிரோதமாக வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளதாக தங்களுக்குப் புகார் கிடைத்துள்ளதாக நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் அவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட 32 அந்நிய நாட்டவர்கள் 24 முதல் 50 வயதுடையவர்கள். அவர்களுள் மாது ஒருவர் எந்தவித அடையாளமும் இன்றி பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளது தெரிய வந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட 32 பேருள் ஐவர் இந்தியப் பிரஜைகள், 17 பாகிஸ்தானியர், 7 வங்காளதேசிகள், 2 ஆடவர்கள் உட்பட ஓர் இந்தோனேசியப் பெண்ணும் அடங்குவார் என அவர் தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட உள்நாட்டு ஆடவர் 1959 /63ஆம் ஆண்டு குடிநுழைவுத்துறைச் சட்டத்தின் 56 (1) (டி) பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட அனைவரும் ஜாலான் டூத்தா குடிநுழைவுத்துறை அலுவலகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் புக்கிட் ஜாலில் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

